[26th August 1955

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" அதை நிபுணர்கள் என்ன அபிப்பிராயம் சொல்லுகிறார்கள் என்பதைப் பொருத்துதான் செய்யவேண்டும். ஆவடியில்கூட அந்தத் தொழிற்சாலையை ஏற்படுத்தலாமென்று முன்பு நாம் ஒரு யோசனைகூறினோம். தண்ணீர் அதிகமாக வேண்டும். இன்னும் சில வசதிகளும் வேண்டும். அதையெல்லாம் கவனித்துத்தான் இடத்தைத் தேர்ந்தெடுக்கவேண்டும். முன்பு ஒரு நிபுணர் வந்து பார்க்கையில் ஆவடியைக் குறிப்பிட்டோம்."

Industries in the Madras State.

* 363 *Q*.—SRI V. V. RAMASWAMI: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) the various industries, major, medium, small-scale and cottage in the Madras State; and

(*b*) the particular cottage industries which they propose to encourage in order to give employment to the agriculturists who are out of work during the greater part of the year?

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" (*a*) The details of the various industries which are proposed to be set up in the Madras State during the next five years are contained in the draft Second Five-Year Plan for the State, copies of which have been circulated to all Members of the Legislature.

" (*b*) All the cottage industries schemes proposed for inclusion in the State Plan are intended to provide greater employment opportunities to the people in the villages."

SRI V. V. RAMASWAMI :—" கிராமங்களிலே நிறுவப்படும் குடிசைத் தொழில்கள் அந்தந்த பிராந்தியத்திலேயே உற்பத்தி செய்யப்பட்டு அங்கேயே விற்பதற்கு மார்க்கெட் வசதிகள் ஏற்படும்படியாக இருக்குமா? அல்லது, பெரிய நகர்ப்புறங்களில் இருக்கின்ற பெரிய தொழிற்சாலைகளுக்கு உதவியாக சிறு கைத்தொழில்கள் பரவலாகக் கிராமங்களில் ஏற்படுத்தப்படுமா என்று கேட்கிறேன்."

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" கூடியவரையில் பரவலாக அந்தந்த கிராமங்களுக்கு ஏற்ற தொழில் என்னவென்று பார்த்து எல்லா ஜில்லாக்களிலும் தொழில்கள் அமையும்படித்தான் ஏற்பாடு செய்யவேண்டும். அதில் இப்பொழுது கவனம் செலுத்தப் பட்டுவருகிறது."

SRI MOHAMED RAZA KHAN :—" Is it true that some of the heavy industries will come under the Government of India Five-Year Plan and not the Provincial Plan?"

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" There is nothing like the Provincial Plan and the Government of India Plan. The Planning Commission have got a different allotment for heavy industries. That is what has been referred to."